கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.30/2023**

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயா | வயது | 48 |
| கணவர் பெயர் | தாமரைச்செல்வன் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | நாரணமங்கலம் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் நாரணமங்கலத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் எனது குழந்தைகளுடன் நாரணமங்கலத்தில் வசித்து வருகிறேன். எனது வீட்டிற்கு வாசலுக்கு எதிர்புறம் ஆற்றங்கரை புறம்போக்கு இடம் உள்ளது. அதை நான் சாணி தெளித்து சுத்தம்படுத்தி பயன்படுத்தி வருகிறேன். எங்கள் வீட்டிற்கு மூன்று வீடு தள்ளி உள்ள ஆஜர் எதிரி மேற்படி புறம்போக்கு இடத்தை நான் பயன்படுத்துவது தொடர்பாக என்னிடம் பிரச்சனை செய்து வந்தார். கடந்த 2023 ஆம் வருடத்தில் 2 வது மாத்தில் 18 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி வெளியே வாடி குச்சிகாரி, தேவடியா என்று திட்டினார். நான் யாரை பேசிகிறாய் என்று கேட்டுக்கொண்டு வெளியே சென்றபோது ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த கட்டையால் என்னை அடித்தார். அதில் நான் கீழே விழுந்து விட்டேன். எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. அதை தடுக்க வந்த மகளையும், எனது கணவரையும் ஆஜர் எதிரி கீழே தள்ளி விட்டார். எதிரி தாக்கியதால் நான் மயக்கம் அடைந்து விட்டேன். எனது மகள் 100 க்குபோன் செய்து விட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் என்னை சிகிச்சையில் சேர்த்தனர். மறுநாள் நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரணை செய்தனர். நான் போலீசாரிடம் நடந்த சம்பவம் குறித்து சொன்னேன். போலீசார் எழுதிக்கொண்டார்கள். எழுதிக்கொண்டதை போலீசார் என்னிடம் படித்துகாண்பித்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அசா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் தெருவில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 100 வீடுகள் உள்ளது. சம்பவத்தை எத்தனை நபர்கள் வேடிக்கை பார்த்தார்கள் என்றால் யாரும் இல்லை. அனைவரும் வேலைக்கு சென்று விட்டார்கள். மேற்படி விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புறம்போக்கு இடத்திற்கு அருகே எங்கள் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புறம்போக்கு இடத்தை எதிரி தாத்தா தையான் என்பவர் பல ஆண்டு காலமாக அனுபவத்தில் வைத்து அதற்கான வரி செலுத்தி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் தாத்தா அனுபவத்தில் மேற்படி நிலம் இருந்தது என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் அந்த நிலம் எங்கள் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நடந்தாக சொல்லப்படும் சம்பவம் எங்கள் வாசலில் நடந்தது என்றால் சரிதான். வாசல் என்பது வேலி அடைப்புகள் உள்ள இடம் என்றால் சரிதான். போலீசார் எப்போது வந்தார்கள் என்றால் நான் மயக்கம் ஆகிவிட்டேன் எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் எப்போது சேர்ந்தேன் என்றால் 18 ம் தேதி சேர்ந்தேன். 19 ம் தேதி வாக்குமூலம் வாங்கினார்கள். 18 ம் தேதி மருத்துவர் என்னிடம் நடந்த விபரங்களை கேட்டு எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். எதிரி தகாத வார்த்தைகளால் பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரி கட்டையால் தாக்கியதாக கூறப்படும் சம்பவமும் வழக்கிற்காக பொய்யாக கூறப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. எதிரியின் தாத்தாவின் அனுபவத்தில் இருந்து வந்த நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி படித்து விட்டு அரசாங்க வேலை தேடிகொண்டிருந்தார் என்றாலும் அவரை எங்கள் வழிக்கு வரவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயமானது வேறு விதமாக ஏற்பட்டது என்றாலும் அதை பயன்படுத்தி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் யாதொரு தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

ஒம்/--
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவாரூர்.